# அரச சேவை ஆணைக்குழு

## பிரதம அமைச்சர் அலுவலகத்தில் இலங்கை தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப சேவையின் பணிப்பாளர் (தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப) பதவியிற்காக உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்காக விண்ணப்பம் கோரும் அறிவித்தல்.

இவ் அலுவலகத்தில் பணிப்பாளர் (தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பம் பதவியிற்காக காணப்படும் 01 வெற்றிடத்திற்காக இலங்கை தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப சேவையின் 1 வகுப்பின் I தரத்தின் உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. அரச சேவை அணைக்குழுவின் உத்தரவிற்கு இணங்க 2019.09.12 ஆம் திகதி வெளியிடப்பட்ட பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 28/2019 இல் இணைப்பு 02 இற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்படிவத்தை 2024.02.14 ஆம் தகிதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அல்லது கொண்டு வந்து "செயலாளர், பிரதம அமமைச்சர் அலுவலகம்" இற்கு கிடைக்க கூடியவாறு அனுப்ப வேண்டும். விண்ணப்படிவத்தினை அனுப்பும் கடித உரையின் இடது பக்க மேல் மூலையில் "பணிப்பாளர் (தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப பதவியிற்கான விண்ணப்பப்படிவம்" எனக் குறிப்பிடப்பட்டு இருக்க வேண்டும்.

விண்ணப்படிவத்தினை அனுப்ப வேண்டிய முகவரி:

செயலாளர்
பிரதம அமைச்சர் அலுவலகம்
58, ஸ்ரீமத் ஏர்னஸ்ட் த சில்வா மாவத்தை
கொழும்பு 07

03. இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் இலக்கம் 2050/43 முற்றும் 2017.12.22 திகதிய விஷேட வர்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட இலங்கை தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப சேவைப் பிரமாணக்குறிப்பிற்கு அமைய அரச சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சையில் காண்பிக்கப்படும் திறமைகளுக்கு அமைய அரச சேவை ஆணைக்குழுவினால் பணிப்பாளர் (தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பம்) பதவியிற்காக நியமிக்கப்படும்.

04. இவ் நேர்முகப் பரீட்சையின் புள்ளிகள் வழங்கப்படும் ஒழங்கு முறைகள்.

| | *சோதித்துப் புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புக்கள்* | *அதிகபட்சப் புள்ளிகள்* |
|---|---|---|
| *01* | ***<u>சேவை அனுபவம் - 60</u>*** | |
| | *I. பதவிக்குரிய தரத்தில் செயலூக்கமானதும் திருப்திகரமானமானதுமான சேவைக் காலத்திற்கு வருடமொன்றுக்கு 05 புள்ளிகளும் ஒரு வருடத்திற்கு குறைந்ததும் 06 மாதங்களுக்கு மேற்பட்டதுமான காலப் பகுதிக்கு 02½ புள்ளிகளும் வழங்கப்படும். 06 மாதங்களுக்கு குறைந்த காலப் பகுதிக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.* | *50* |
| | *II. நிறுவனத்தின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் தேவைகளுக்கு (பிரதி/ உதவிப் பணிப்பாளர் ஆக) உரிய முன் அனுபவத்திற்கு (அதிகபட்சம் 5 வருடங்களுக்கு) ஒரு வருடத்திற்கு 02 புள்ளிகள் வீதமும் 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலப் பகுதியொன்று 01 புள்ளி வீதமும் வழங்கப்படும். 06 மாதங்களுக்கு குறைந்த காவப் பகுதிக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.* | *10* |

*திறமை - 40*

02 *I.* **கல்வித் தகைமைகள்**

உத்தியோகத்தர்களை சேவையில் ஆட்சேர்ப்புச் செய்யும் போது கவனத்திற் கொள்ளப்பட்ட அடிப்படைத் தகைமைகளுக்கு மேலதிகமாக இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் பிரமாணக் குறிப்பின் நிபுணத்துவ துறைகளின் வகைப்படுத்தலுக்குரிய அல்லது விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள பதவிக்குரிய கல்வித் தகைமைகள் மாத்திரம் கவனத்திற் கொள்ளப்படும். *15*

அ) பட்டப்பின் பட்டம் - *15* புள்ளிகள்
ஆ) பட்டப்பின் டிப்ளோமா - *10* புள்ளிகள்

- பெற்றுள்ள ஆகக் கூடிய தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.

*II.* **தொழிற் தகைமைகள்** *10*

(அ) (i) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையுடன் தொடர்புடையதாகப் பெற்று ஆகக் குறைந்தது ஒரு வருடம் அதற்கு மேற்பட்ட காலப் பகுதியைக் கொண்ட டிப்ளோமா பாடநெறியொன்றுக்கு - *10*

(உள்நாட்டு/ வெளிநாட்டு)

(ii) அத்துறையில் *06* மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட ஒரு வருடத்திற்கு குறைவான பாடநெறிகளுக்கு – *05*

(ஆ) நிறுவனத்தினால் தீர்மானிக்கப்படும் பதவிக்கான துறையில் பூர்த்தி செய்துள்ள சர்வதேச மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் சான்றிதழ்கள் *(Professional Certifications)* காலப் பகுதிகளைப் பொருட்படுத்தாது மேலே *2 (II)* (அ) *(i)* இன் கீழே கவனத்தில் எடுக்கப்படும்.

உதாரணம் :
1) BCS/ACS
2) Microsoft Certifications
3) Sun Certifications
4) Cisco Certifications
5) Open Source Certifications
6) etc…

*III.* **விசேட பணிகள்/ பங்களிப்புக்கள்** *10*

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடையதாகச் செய்த புத்தாக்கங்கள், மேம்படுத்தல்கள் மற்றும் வெற்றிகள், பரிசுகள், பாராட்டுக்கள் என்பவற்றுக்கு இதன் கீழ் புள்ளிகள் வழங்கப்படும்.

(அ) புதிய படைப்புக்கள், மேம்படுத்தல்கள், வெற்றிகள் அல்லது பரிசுகள் என்பவற்றுக்கு ஒன்றுக்கு *02* புள்ளிகள் வீதம் அதிகபட்சமாக *05* விடயங்களுக்கு *10* புள்ளிகள்

(ஆ) பொது *230b* படிவத்தில் சமர்ப்பித்து அமைச்சின் செயலாளரினால்/ நிறுவனத் தலைவரினால் சான்றுப்படுத்தப்பட்ட பாராட்டு *01* இற்கு *01* புள்ளி வீதம் அதிகபட்சமாக *05* பாராட்டுகளுக்கு மாத்திரம் அதாவது அதிகபட்சமாக *05* புள்ளிகள் மாத்திரம் வழங்கப்படும். விண்ணப்பதாரர் ஒருவருக்கு அதிகபட்சமாக *05* புள்ளிகள் வழங்கப்பட்டதன் பின்னர் மேலே *III* (அ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு இந்தத் தகைமைகளின் கீழ் வழங்கப்படும் மீதமுள்ள *05* புள்ளிகளையும் பெற்றுக் கொள்ள முடியும்.
மேலே *(III)* (அ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு

உதாரணம்:

1) மென்பொருள் உருவாக்கம்/அபிவிருத்தி *(Software Designing/ Development)*
2) வலையமைப்பு நிர்வாகம் *(Network Administration)*
3) முறைமை நிர்வாகம் *(System Administration)*
4) தரவு அடிப்படை நிர்வாகம் *(Data Base Administration)*
5) சாதாரண தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் செயற்பாடுகள் மற்றும் ஏனையவை *(General ICT Tasks & etc.)*

கவனிக்கவும் :

❖ புத்தாக்கங்கள் மற்றும் மேம்படுத்தல்கள் விண்ணப்பதாரரினால் செய்யப்பட்டவை என்பது நிறுவனத் தலைவரினால் சான்றுப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

❖ பரிசுகள் மற்றும் வெற்றிகள் விண்ணப்பதாரரினால் பெறப்பட்டவை என்பதை முறையான சான்றிதழ்கள் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

***IV.*** **நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமை** *05*

அ) தலைமைத்துவம் - புள்ளிகள் *02*
ஆ) தொடர்பாடல் ஆற்றல் - புள்ளிகள் *02*
இ) தொழில்சார் மரியாதைக்குரிய நடத்தை - புள்ளிகள் *01*

அரச சேவை ஆணைக்குழுவின் உத்தரவின் பிரகாரம் திகதி : 2024.01.30

ஒப்பம் : அநுர திசாநாயக்க
பிரதம அமைச்சரின் செயலாளர்
பிரதம அமைச்சர் அலுவலகம்
58, ஸ்ரீமத் ஏர்னஸ்ட் த சில்வா மாவத்தை
கொழும்பு 07

Telephone No :+94 11 2575311
Fax :+94 11 2575310
Email :secpm@pmoffice.gov.lk

பிரதம அமைச்சர் அலுவலகம்

இலங்கை தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப சேவையின் பணிப்பாளர் (தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பம்) பதவியிற்கான விண்ணப்பப் படிவம்.

*பகுதி (அ) - உத்தியோகத்தரினால் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.*

1. முழுப் பெயர் - திரு/திருமதி/செல்வி :……………………………………………………………………………………

2. பிறந்த திகதி :……………………………………………………………………………………………………

3. தேசிய அடையாள அட்டை இலக்கம் :…………………………………………………………………………

4. சேவைக் காலம்

| *வகுப்பு/ தரம்* | *சேவைக் காலம்* |
|---|---|
| வகுப்பு *1* தரம் *I* | |
| வகுப்பு *1* தரம் *II* | |
| வகுப்பு *1* தரம் *III* | |

5. தற்போது பணிபுரியும் பதவி மற்றும் பணித் துறை :…………………………………………………………

6. கல்வித் தகைமைகள்

   - பெற்றுள்ள பட்டப்பின் பட்டம் /பட்டப்பின் டிப்ளோமா பற்றிய விபரங்கள்

| **பட்டப்பின் பட்டம்/ பட்டப்பின் டிப்ளோமா** | **ஆண்டு** | **பல்கலைக்கழகம்** | **பாடங்கள்** |
|---|---|---|---|
| | | | |

7. தொழிற் தகைமைகள் :………………………………………………………………………………………

8. பூர்த்தி செய்த விசேட பணிகள்

| **ஆற்றிய சேவை/ விசேட பணிகள்/ பங்களிப்புக்கள்/ வெற்றிகள்** | **விபரம்** | **நிறுவனத் தலைவரின் சான்றுப்படுத்தல் உள்ளது/ இல்லை** |
|---|---|---|
| | | |

மேலே குறிப்பிட்ட தகவல்கள் உண்மையானவை என்று வெளிப்படுத்துகிறேன்.

திகதி :...................................

.......................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்
பதவிப் பெயர் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை

---

பகுதி (ஆ) - நிறுவனத் தலைவரினால் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

I. உத்தியோகத்தர் விண்ணப்பங்கள் கோரப்படும் திகதிக்கு உடன் முன்னர் 03 வருடங்கள் செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ளார்/ செய்யவில்லை.

II. உத்தியோகத்தர் விண்ணப்பங்கள் கோரப்படும் திகதிக்கு உடன் முன்னரான 03 வருட காலத்தில் சம்பள ஏற்றங்களை உழைத்துள்ளார்/ உழைக்கவில்லை

III. உத்தியோகத்தர் விண்ணப்பங்கள் கோரப்படும் திகதிக்கு உடன் முன்னரான 03 வருட காலத்தில் ஏதேனும் ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகியுள்ளார்/ ஆளாகவில்லை

IV. உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அல்லது ஒழுக்காற்று விசாரணை நடைபெற்று வருகின்றது/ நடைபெறவில்லை

V. உடன் முன்னரான 03 வருட காலத்தினுள் பெற்ற விடுமுறைகள் பற்றிய தகவல்கள்

| தொடர் இலக்கம் | ஆண்டு | சம்பளதுடனான விடுமுறைகள் | அரைச் சம்பளதுடனான விடுமுறைகள் | சம்பளமற்ற விடுமுறைகள் |
|---|---|---|---|---|
| | | | | |

மேலே குறிப்பிட்ட உத்தியோகத்தரின் தனிப்பட்ட கோவைக்கு இணங்க சரியானவை என்றும் இந்த உத்தியோகத்தர் விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் அதற்கு அவரை பதிலீடு இன்றி/ பதிலீட்டுடன்/ பின்னர் பதிலீடு வழங்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் விடுவிக்க முடியும் என்று பணிவுடன் அறியத் தருகின்றேன்.

திணைக்கள/ நிறுவனத் தலைவரின் கையொப்பம்
பதவிப் பெயர் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை